**O.S. No.158/2020**

**Date: 19.09.2025**

**பி.வா.சா.1. மூக்கையா**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தபசு சொத்துக்கள் அனைத்தும் 2ம் பிரதிவாதியிடம் இருந்து கணேசன் என்பவரிடம் கிரயம் பெற்ற சொத்து ஆகும். தபசில் சொத்து வாதி இன்சினியரிங் கம்பெனி நடத்தி வந்தார் என்றால் சரிதான். அவ்விதம் கம்பெனியில் பொருட்கள் செய்யும் இயந்திரங்கள் தபசு சொத்து என்றால் சரிதான். இன்சினியரிங் கம்பெனியை வாதி தான் லைசென்ஸ் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தில் ரூ. 4, 5 இலட்சம் பெறுமானமுள்ள பொருட்கள் இருந்தது. 31.01.2007 நான் கிரயம் வாங்கும் போது மேற்கோப்பு சொத்துக்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தை முத்து என்பவர் தான் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கிய காலத்தில் முத்துவிடமிருந்து சாவியை வாங்கவில்லை. மேற்படி சொத்தில் நான் அத்துமீறி நுழைந்ததாக வாதி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். நான் ஆவணத்தை காண்பித்தேன். ஆனால் மேற்கோப்பு பொருட்களை நான் ஒப்படைத்ததாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 2019 ம் ஆண்டிலேயே வாதி கட்டிடம் கட்டி கட்டிட உரிமம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி உரிமத்தை பற்றி எனக்கு தெரியாது. வாதி தான் ஜி.எஸ்.டி. தாக்கல் செய்துவருகிறார் என்றால் எனக்கு தெரியாது. நான் கிரயம் முடிந்த காலத்தல் மேல்கோப்பு சொத்தை மறைத்து தான் கிரயம் முடித்தேன் என்றால் சரிதான். மேல்கோப்பு வாதிக்கு சொந்தமானது என்றாலும் வாதியை மோசடி செய்யும்நோக்கில் மேல்கோப்பு சொத்தை மறைத்து கிரயம் பெற்றேன் என்றால் சரியல்ல. மேற்படி மேல்கோப்பு

சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.